மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 07 வெள்ளிக்கிழமை 23.08.2024 கதிர் 340




# தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மானியம் வழங்குவதை ஏற்கமுடியாது

## தேர்தல் ஆணைக்குழுவில் பெப்ரல் முறைப்பாடு

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் மக்களுக்கு மானியங்கள் வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பெப்ரல்' தெரிவித்துள்ளது. அவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

2➤





# தமிழ்ப் பொது வேட்பாளரின் பிரசாரப் பயணம் ஆரம்பம்

தமிழ்ப் பொதுவேட்பாளரின் "நமக்காக நாம்" தேர்தல் பிரசாரப் பயணம் இன்று காலை 9.00 மணியளவில் யாழ்ப்பாணம் சக்கோட்டை கொடிமுனையில் இருந்து ஆரம்பமானது. தமிழ் பொது வேட்பாளர் பாக்கிய செல்வம் அரியநேத்திரன் உள்ளிட்ட குழுவினர் பிரசார துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

இந்த பயணம் தொடர்ந்து பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி, தொண்டைமாணாறு, வளலாய், பலாலி, தையிட்டி, காங்கேசன்துறை ஆகிய இடங்களின் ஊடாக நகரவுள்ளது.

தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிற்குமாக தொடர்ந்து நடைபெற இருக்கும் இந்த பிரச்சாரப் பயணம், வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிற்கும் மக்களின் அழைப்பின் பெயரிலான பிரசாரப் பணிகளும் திட்டமிடப்படுவதாகம் தெரியவந்துள்ளது.

# ரணில் வெளியிட்ட சொத்து விபரம் பொது மக்கள் நம்பப்போவதில்லை

## சுனில் ஹந்துநெத்தி

ஜனாதிபதியானதும் அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சொத்துக்கள் குறித்து முதலில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தனது சொத்துக்கள் குறித்த விபரங்களை நேர்மையான விதத்தில் வெளியிடவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது சொத்துக்கள் குறித்து வெளியிட்டுள்ள விபரங்களை பொதுமக்கள் நம்பமாட்டார்கள் என செய்தியாளர் மாநாட்டில் இன்று அவர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் வெளியிட்டுள்ள சொத்து விபரங்களை விட குறைவான சொத்துவிபரங்களை ஜனாதிபதி காண்பித்துள்ளாரே என்றசெய்தியாளரின் கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவருடைய சொத்துக்களை விட குறைவான சொத்துக்களை ஜனாதிபதி காண்பித்துள்ளதை மக்கள் நம்புவார்கள் என நீங்கள் நம்புகின்றீர்களா? ரணில் இங்கும் ஏமாற்றியுள்ளார். ஜனாதிபதியானதும் முதல் வேலையாக அநுரகுமார திசநாயக்க ரணில்விக்கிரமசிங்க வெளியிட்ட சொத்து விபரங்கள் சரியானவையா என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியுடன் இணைந்தார் அங்கஜன் நேரில் சந்தித்து ஆதரவைத் தெரிவித்தார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த ஆகியோர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளார்கள்.

கொழும்பு, ஃப்ளாவர் வீதியில் அமைந்துள்ளது ஜனாதிபதியின் தேர்தல் காரியாலயத்தில் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரு தலைவர்களும் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் செய்யவுள்ளதாகத் தெரிவித்தனர்.

2➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# யாழில் வர்த்தகக் கண்காட்சி




யாழ்ப்பாணத்தின் தொழில்துறைகளைப் பிரபல்யப்படுத்தி மேம்படுத்தும் நோக்குடன் "யாழ்பபாணம் எக்ஸ்போ 2024" எனும் வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ். முற்றவெளி மைதானத்தில் இன்று ஆரம்பமான இந்தக் கண்காட்சி நாளைமறுதினம் வரையில் நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியை முற்றிலும் இலவசமாகப் பார்வையிட முடியும்.

## ஜனாதிபதியுடன்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் அங்கஜன் இராமநாதன், 2013 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு வட மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு, 2015 இல் தேசியப் பட்டியல் உறுப்பினராக முதல் தடவையாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். 2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு இரண்டாவது தடவையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவானார். தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவராக கடமையாற்றி வருகின்றார்.

சாரதி துஷ்மந்த மித்ரபால 2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கேகாலை மாவட்டத்தை பிரதிநிதிப்படுத்தி முதன்முறையாக பாராளுமன்றத்திற்கு தெரிவானார். கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தோடு, வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவ்வாறான சலுகைகள் மக்களுக்கு வழங்கப்படவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

மேலும், மக்களின் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க மானியங்கள் வழங்குவது அவசியமானால் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அவற்றை வழங்க முடியும் என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு மூன்று நாடுகள் பயண எச்சரிக்கை

இலங்கையில் எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு பயண எச்சரிக்கையை அவுஸ்திரேலியா, கனடா மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் விடுத்துள்ளன.

இதன்படி, தேர்தலுக்கு முன்னரும், தேர்தலின்போதும், அதன் பின்னரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறலாம் என்பதால், வெளிநாட்டு பிரஜைகள் முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் செப்டம்பர் 21ஆம் திகதி இடம்பெறும் எனவும் தேர்தலுக்கு முன்பும், தேர்தலின் போதும், அதன் பின்பும் பொது ஆர்ப்பாட்டங்கள் நடந்து வன்முறையாக மாறலாம் என்றும் அவுஸ்திரேலியா அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், "ஆர்ப்பாட்டங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தவிர்க்குமாறு" அவுஸ்திரேலியா தனது நாட்டு பிரஜைகளுக்கு வலியுறுத்தியுள்ளது. இதனிடையே, தேர்தல் காலத்தில் அரசியல் பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படலாம் என்று அயர்லாந்து தெரிவித்துள்ளது. ஆகையினால் இலங்கைக்கு பயணிக்கும் ஐரிஷ் பிரஜைகள் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும், எனவும், ஆர்ப்பாட்டங்களை தவிர்க்கவும் உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனைகளை பின்பற்றவும் வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற உள்ளதாகவும், இந்தக் காலப்பகுதியில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறலாம் என்றும் கனடா தனது பிரஜைகளுக்கு எச்சரித்துள்ளது.



## பிரதமர் தினேஷ் குணவர்த்தன சந்திரகுமாருடன் சந்திப்பு

பிரதமர் தினேஸ்குனவர்த்தன அவர்களை சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திகுமார். கொழும்பில் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பின் போது இனங்களுக்கிடையில் நம்பிக்கையையும் பரஸ்பரத் தன்மையையும் சம உரிமையையும் கொண்ட அரசியல் தீர்வவின் அவசியம் பற்றியும், சம கால நிலவரங்கள் மற்றும் ஜனாதிபதி தேர்தல் பற்றியும்கலந்துரையாடப்பட்டன என சமத்துவக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதன் போது தமிழ் மக்களின் அரசியல், அன்றாட பிரச்சினைகள், முக்கியமாக நிலம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் என்பன அடங்கிய மகஜரும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

## 2005 ஆம் ஆண்டு இழைத்த தவறை தமிழர்கள் மீண்டும் இழைக்கமாட்டர்

### தலதா அத்துகோரள நம்பிக்கை



"2005 ஆம் ஆண்டு இழைத்த தவறைவடக்கு, கிழக்கு மக்கள் மீண்டும் இழைக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அன்று ஜனாதிபதித் தேர்தலை அம்மக்கள் புறக்கணித்தால்தான் ரணில் விக்கிரமசிங்க தோற்றார்." - என்று முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"1950 களில் பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறினார். ஆனால், கட்சி பலவீனமடையவில்லை. 1991 இல் லலித் மற்றும் காமினி திஸாநாயக்க ஆகியோர் ஐ.தே.கவைவிட்டு வெளியேறி புதிய கட்சியை ஸ்தாபித்தனர். அப்போதும் ஐக்கிய தேசியக் கட்சி பின்னடைவைச் சந்திக்கவில்லை. எனினும், சஜித் பிரேமதாஸ தலைமையில் நாம் வெளியேறிய பின்னரே கட்சி பிளவைச் சந்தித்தது. அவ்வாறானதொரு முடிவை எடுத்திருக்கக்கூடாது என்று தற்போது தோன்றுகின்றது. பிரதான கட்சியை உடைத்துவிட்டோமே என்ற மனக்கவலை இன்னும் உள்ளது.

1994 ஜனாதிபதி தேர்தலின்போது காமினி திஸாநாயக்க படுகொலை செய்யப்பட்டார். அதனால் கட்சி தோற்றது. பின்னர் 1999 ஜனாதிபதித் தேர்தலில் கடைசி பிரசாரக் கூட்டத்தின்போது சந்திரிகா குண்டு தாக்குதலுக்கு இலக்காகிக் கண்ணை இழந்தார். இறுதியில் அனுதாப வாக்குகளால் வெற்றி பெற்றார்.

2005 இல் ராஜபக்ஷ குழுவின் சூழ்ச்சிக்குள் சிக்கி அப்பாவி வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளைப் புறக்கணிக்கச் செய்தனர்.

இதனால் ரணில் தோற்றார். வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்திருந்தால் ரணில் அன்று நிச்சயம் ஜனாதிபதியாகி இருப்பார். எனவே, ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்ட இரு தடவைகளிலும் அவர் இயல்பாகவே தோல்வியைச் சந்திக்கவில்லை. அதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

எனினும், 2005 இற்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மக்கள் தமது வாக்குகளை எமது முகாமுக்கே வழங்கி வருகின்றனர். எனினும், தற்போது சஜித்தும், ரணிலும் பிரிந்து நிற்பதால் எவருக்கு வாக்களிப்பது என்ற பிரச்சினை உருவாகியுள்ளது. இதன் உண்மைத்தன்மை செப்டெம்பர் 22 ஆம் திகதியே தெரியவரும்." - என்றார்.



# யாழ். புத்தூரில் நிப்பொனின் புதிய விற்பனையகம்










யாழ்ப்பாணம் புத்தூரில் நிப்பொனின் புதிய விற்பனையகம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நிப்பொனின் பிராந்திய முகாமையாளர் பெருமாள் தலைமையில் இடம்பெற்ற இந்த விற்பனையத்தின் ஆரம்ப நிகழ்வில், நிப்பொனின் பிரதேச விற்பனை முகாமையாளர் றோய்ஸ், வட பிராந்தியத்துக்கான நிப்பொனின் விற்பனைப் பிரதிநிதிகள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

புத்தூர்ச் சந்திக்கருகில் அம்பாள் பெயின்ட் ஸ்டோர் என்ற பெயரில் இயங்க ஆரம்பித்துள்ள இந்த விற்பனை நிலையத்தில், நிப்பொன் பெயின்டின் தயாரிப்புகள் அனைத்தையும் கொள்வனவு செய்திடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நிலவும் குருதித்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையிலும்,பாடசாலை மாணவர்களிடையே குருதித் தானம் செய்வது சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் யாழ்ப்பாணம், சுண்டிக்குளி பெண்கள் உயர் கல்லூரி மாணவத்தலைவிகள் அமைப்பு ஒழுங்கு செய்திருந்த இரத்ததான நிகழ்வு அணமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது பெருந்தொகையில் கல்லூரி மாணவிகள் குருதிக் கொடை வழங்கினார்கள்.







## சுற்றுலா படகுகள் விபத்து இருவரைக் காணவில்லை

இரண்டு சுற்றுலாப் படகுகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காணாமல்போயுள்ளனர்.

அளுத்கம, பெந்தர ஆற்றில் நேற்று வியாழக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அளுத்கமவில் உள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் பணி முடிந்து ஆட்களை ஏற்றிச் சென்ற படகும் பெந்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுற்றுலாப் படகுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் பெந்தர சுற்றுலா விடுதியொன்றில் இருந்த இருவரே காணாமல போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல்போனவர்களைக் கண்டறிவதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், சம்பவம் தொடர்பில் கடற்படையினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அளுத்கம மற்றும் பெந்தர பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கட்டடத் தொழிலாளி சடலமாக மீட்பு



கிளிநொச்சி, இரத்தினபுரம் பகுதியில் கட்டட வேலையில் ஈடுபட்டு வந்த தொழிலாளர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேல் மாடி கட்டடத்தின் இரண்டாம் மாடியில் நேற்று வியாழக்கிழமை இரவு இருவர் வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்த நிலையில் ஒருவர் நித்திரைக்குச் சென்றிருந்தார். இந்நிலையில், மற்றவர் வேலை செய்து கொண்டிருந்தார்.

நித்திரைக்குச் சென்றவர் அதிகாலை எழுந்து வேலை செய்து கொண்டிருந்தவரைக் காணாது தேடியபோது அவர் சடலமாகக் கீழே காணப்பட்டார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 34 வயதுடைய சின்னான்டி பரமேஸ்வரன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுகிறதா?

எஸ்.கிருஷ்ணகுமார்

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு என்று சொன்னாலும் இலங்கையைப் பொறுத்தவரையில் அது உண்மையில் சுயாதீனமாக இயங்குகின்றதா?

ஜனாதிபதித் தேர்தலுக்கான தினம் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், கள நிலைமைகளைப் பார்க்கும் போது இந்தக் கேள்வி தவிர்க்க முடியாதவகையில் எழுகின்றது. சுயாதீனமாக செயற்படுகின்றதா என்ற கேள்வியுடன் அதற்கு போதிய அதிகாரங்கள் இருக்கின்றதா என்ற கேள்வியும் மேலதிகமாக எழுகின்றது.




தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டால் தேர்தல் நடைமுறைகள் பல உள்ளன. குறிப்பாக, தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் வாக்களிப்பு நடைபெறும் தினம் வரையில் "காபந்து அரசாங்கம்" என்ற நடைமுறைதான் பெரும்பாலான நாடுகளிலும் பின்பற்றப்படும். இந்தக்காலத்தில் தேர்தல் ஆணைக்குழுதான் அதிகாரம் மிக்கதாக இருக்கும். புதிய நியமனங்கள், தேர்தல் செயற்பாடுகளுக்காக அரசாங்கத்தின் வளங்களைப் பயன்படுத்துவது என்பன தடை செய்யப்பட்டிருக்கும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அந்த நிலை இல்லை. கடந்த காலங்களிலும் இருக்கவில்லை. இப்போதும் இல்லை!

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாக உயர் நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்புகூட, தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்கவில்லை என்பதைத்தான் உறுதிப்படுத்தியிருக்கின்றது.

கடந்த வருடம் மார்ச் மாதத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெற்றிருக்க வேண்டும். அதற்கான நியமனப் பத்திரங்களும் கோரப்பட்டு கட்டுப்பணமும் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால், தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி திறைசேரியால் வழங்கப்படவில்லை. நிதி அமைச்சராகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்க அதனைத் தடுத்தார். பொருளாதார நிலையைக் காரணம் காட்டி மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டது.

இந்த சம்பவத்தின் பின்னணியில் இருந்த அரசியல் என்ன என்பது வாசகர்களுக்குத் தெரியும்.

தேர்தல் ஆணைக்குழு முற்று முழுதாக சுயாதீன மானதாகவும் பலமானதாகவும் இருந்திருந்தால் அந்த நிலை ஏற்பட்டிருக்காது. அரசியல்ரீதியான காரணத்துக்காக பொருளாதார நெருக்கடி கூறப்பட்டமைக்கு நிதி அமைச்சராக இருக்கும் ஜனாதிபதியும் தேர்தல் ஆணைக்குழுவும்தான் பொறுப்பு என்று உயர் நீதிமன்றம் கூறியிருக்கின்றது!

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் முடக்கியதன் மூலம் நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏனைய தேர்தல்களின் அட்டவணைகளைப் பாதிக்காத வகையில், உடனடியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதால் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும் நீதிமன்றம் கூறியிருக்கின்றது.



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைக்கச் செய்வதற்காக ஜனாதிபதி எவ்வாறான உபாயங்களைக் கையாண்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழுத்தம் கொடுத்தார் என்பதும் இரகசியமானதல்ல.

இப்போது ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கும் தன்னாலான அத்தனை முயற்சிகளையும் ஜனாதிபதி மேற்கொண்டார் என்பதும் அனைவருக்கும் தெரியும். தேர்தலில் தன்னால் வெற்றிபெற முடியுமா என்ற சந்தேகம் அவருக்கு இருந்தமையால்தான் அரசியலமைப்பில் இருக்கக்கூடிய அத்தனை ஓட்டைகளையும் ஆராய்ந்து தேர்தலை ஒத்திவைக்க முடியுமா என்பதை ஆராய்ந்தார்.

இலங்கையின் தேர்தல் சட்டத்தைப் பார்த்தால் ஜனாதிபதித் தேர்தலும், பொதுத் தேர்தலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் எப்படியும் நடத்தப்பட்டேயாக வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும், மாகாண சபைகளுக்கான தேர்தலையும் தொடர்ச்சியாகத் தள்ளிப்போடுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் எப்படியும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்து நியமனப் பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டுவிட்ட நிலையில், அதனை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும் என்ற நிலை ரணில் விக்கிரமசிங்கவுக்கு.

இதனை எதிர்கொள்வதற்காக பல உபாயங்களை அவர் வகுத்துவைத்துள்ளார். நிதி அமைச்சராகவும் ரணில் இருப்பதால் பல விடயங்களைக் கையாள்வது அவருக்கு இலகுவாக இருக்கின்றது.

குறிப்பாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலமான நிதி ஒதுக்கீடு. ரிஷாட் பதியுதீனுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 30 கோடி ரூபா இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றது. சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற ரிஷாட்டின் முடிவையடுத்தே இந்த அதிரடி நடவடிக்கை. அதேபோல, ரிஷாட் தலைமையிலான மக்கள் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி ரணிலை ஆதரிக்க முடிவெடுத்தமையால் அவருக்கு பல கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதிகள் ஜனாதிபதித் தேர்தலுக்காகவே செலவிடப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவில் முறையிடப்போவதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

இது ஒருபுறமிருக்க ரணிலை ஆதரிப்பதாக அறிவித்த இரண்டு எதிரணி உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், அலி சாஹிர் மௌலானா ஆகியோர் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்த ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தெரிவான இருவர் கடந்த வாரம் அமைச்சுக்களின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தச் செயற்பாடுகள் அனைத்துமே தேர்தல் சட்டங்களை ஏதோ ஒருவகையில் மீறுபவைதான். ஆனால், தேர்தல் ஆணைக்குழு முழு அளவில் சுயாதீனமானதாக இல்லாதிருப்பதும், அதிகரமற்றதாக அது இருப்பதும் இவற்றையிட்டு தட்டிக்கேட்க முடியாத நிலையில் இருப்பது சுயாதீனமான தேர்தலை எவ்வாறு உறுதிப்படுத்துவதாக இருக்கும்.



- GOODGIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD
- LONG LIFE CARE (PVT) LTD
- GREEN MEDIA HOUSE (PVT) LTD
- SEMBA SERVICES (PVT) LTD

# கூடிய விரைவில் உள்ளூராட்சி தேர்தலை நடத்த நடவடிக்கை

## தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர்

குறிப்பிட்ட காலப் பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்ந்தும் முயற்சித்து வருவதாகவும் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படாததால் இந்த பிரச்சினை எழுந்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உயர் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டதையடுத்து தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொள்வதாகவும், உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் முழுமையாக கிடைத்தவுடன் தேர்தல்கள் ஆணைக்குழு கூடி தேர்தல் தொடர்பாக எடுக்க வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்கும் என்றும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அரசியல் செல்வாக்கு காரணமாக தேர்தல்கள் ஆணைக்குழு தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர், தற்போதைய சூழ்நிலையில் தேர்தலை நடத்துவதற்கான வழியைக் கண்டறிய தேர்தல்கள் ஆணைக்குழு தன்னால் இயன்றவரை முயற்சித்ததாகக் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்ந்தும் முயற்சித்து வருவதாகவும், தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படாததால் இந்த பிரச்சினை எழுந்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மீண்டும் வலியுறுத்தினார்.

உயர் நீதிமன்றத்தின் தீர் மான மானது தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்ததன் மூலம் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகளை நிதியமைச்சரான ஜனாதிபதி, தேர்தல்கள் ஆணைக் குழு மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் மீறியுள்ளதாகவும், தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# சீனா என்றால் சம்மதம்! இந்தியா என்றால் மட்டும் எதிர்ப்பது ஏன்?

## செல்வம் அடைக்கலநாதன் கேள்வி

“துறைமுக நகரம் போன்றவற்றை சீனாவுக்கு கொடுக்கும் போது எதுவும் கூறாமல் இருப்பவர்கள் இந்தியாவுக்கு எதனையாவது கொடுப்பது என்றால் மட்டும் எதிர்ப்பு தெரிவிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல” என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே செல்வம் அடைக்கலநாதன் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய செல்வம் அடைக் கலநாதன், “கொழும்பில் இரண்டு நகரங்கள் உள்ளன. தலைநகரமான கொழும்பும், துறைமுக நகரமும் இருக்கின்றன. விமல் வீரவன்ச போன்றவர்கள் இந்தியாவுக்கு எதனையாவது கொடுப்பதென்றதல் அதனை எதிர்த்து பேசுவார்கள். ஆனால் துறைமுக நகரம் சீனாவுக்கு சொந்தமானதாக இருக்கின்றது” என்று தெரிவித்தார்.

“துறைமுகத்தில் ஒரு இடத்தை இந்தியாவுக்கு கொடுத்தால் அதனை எதிர்க்கின்றகூனர். ஏன் இப்படி இருக்கின்றனர்? ஏன் பாகுபாடுடன் இருக்கின்றீர்கள்?” என்றும் கேள்வி எழுப்பியய செல்வம் அடைக்கலநாதன், “முதலீடுகள் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றது” என்றும், “சீனாவின் விருப்பத்தை செய்யும் போது ஏன் இந்தியாவின் விருப்பத்தை செய்ய முடியவில்லை?” என்றும் கேள்வி எழுப்பினார்.

“வடக்கு, கிழக்கில் ஹெரோயின், கஞ்சா, கள்ளச்சாரயம் மற்றும் மதுபால நிலையங்களால் இளைஞர்கள் தமது வாழ்க்கையை தொலைத்துக் கொண்டு இருக்கின்றனர்” என்று தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன், “இதனால் போதைப்பொருட்களை உடனடியாக ஒழிக்க வேண்டும்” என்றும் வலியுறுத்தினார்.

# உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு கவலையில்லை என்கிறார் ரணில்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு தான் வருந்தவில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மஹரகம இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்ற புதிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டமை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலென சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும்,

அந்த தருணத்தில் மக்களின் வாழ்வுரிமையை பாதுகாப்பதற்காக அர்ப்பணித்ததன் காரணமாக தேர்தலை நடத்த முடியாமற்போனதற்கு

வருந்தவில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாப்பதற்கும் வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்கும் தான் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
குளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# கனடாவில் சிறப்பாக நடைபெற்ற வென்மேரி விருது வழங்கும் விழா



வென்மேரி சர்வதேச விருதுகள் வழங்கும் விழா கடந்த வாரம் கனடாவில் சிறப்பாக நடைபெற்றது. கனடாவின் அஜக்ஸ் நகரில் கடந்த வாரம் இது நடைபெற்றது.

இதில் தகுதிவாய்ந்த சாதனையாளர்கள் 19 பேர் உலகின் பல நாடுகளிலிருந்தும் அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பட்டனர்.

"வென்மேரி சர்வதேச விருதுகள்" வழங்கும் விழாக்குழுவின் நிறுவனர் அனுரா வென்சலாஸ் தலைமையில் அவர் சார்ந்து குடும்பங்கள் சார்ந்த அங்கத்தவர்கள் மற்றும் பலர் வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு வந்து இவ்வருட விருது விழாவைச் சிறப்பித்தார்கள்.

வென்மேரி சர்வதேச விருதுகள் வழங்கும் திட்டத்தின் தேர்வுக் குழுவிற்கு தலைவராக விளங்கும் பேராசிரியர் சிவலிங்கராஜா கனடாவிற்கு வருகை தந்திருந்து அன்றைய விழாவின் தலைமையுரையை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி கலந்துகொண்டார்.







## சிவலிங்கராஜாவின் நான்கு நூல்கள் கனடாவில் வெளியீடு



கனடாவில் நடைபெற்ற 'வென்மேரி' சர்வதேச விருது விழாவில் கலந்து கொள்ளவென கனடா வந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் நான்கு நூல்கள் மார்க்கம் நகரில் வெளியிடப்பெறுகின்றன.

மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதியின் ஏற்பாட்டிலும் அவர் தலைமையிலும் நடைபெறவுள்ள இந்த நூல்கள் வெளியீட்டு விழாவானது நாளை சனிக்கிழமையன்று மாலை 4.00 மணி தொடக்கம் 6.30 வரை 5665 14வா யுளநரெந, ஆயசமாயஅ என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Aanlin Community Centre Auditorium என்னும் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் வெளியிடப்படவுள்ள பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் இந்த நூல்கள் ஏற்கெனவே பல்லாயிரக்கணக்கான வாசகர்களாலும் பல்கலைக்கழக மாணவர்களாலும் வாசிக்கப்பெற்று பாராட்டைப்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தககது.

இந்த விழாவில் பங்கு கொண்டு பேராசிரியரின் கலை இலக்கிய மற்றும் மொழி-கல்வி சார்ந்த பணிகளுக்கு ஆதரவு வழங்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் வேண்டிக்கொள்கின்றார்கள்.

## கனடா வரணி ஒன்றிய வருடாந்த ஒன்று கூடல்

கனடாவில் கடந்த வாரஇறுதியில் நடைபெற்ற 'வரணி ஒன்றியம்- கனடா' நடத்திய வருடாந்த ஒன்றுகூடல் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

ஒன்றியத்தின் நிர்வாக சபையினர் இணைந்து ஊரைச் சேர்ந்த கனடா வாழ் குடும்பங்கள் அனைவரும் இணைந்து இந்த ஒன்றுகூடலில் பங்கேற்றனர்.

அங்கு நண்பர்கள்- வர்த்தகப் பிரமுகர்கள்- ஊடக நண்பர்கள் என அனைத்து தரப்பினரும் ஆர்வத்தோடு பங்கு கொண்டனர்.

கனடா உதயன் பிரதம ஆசிரியரும் அங்கு சென்று தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள் மற்றும் பொழுது போக்கு அம்சங்கள் என அனைத்து தரப்பினரையும் மகிழ்விக்கும் வகையில் மேற்படி ஒன்று ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது என்றால் அது மிகையாகாது.




# பணவீக்கம் அதிகரிப்பு!

தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த ஜூலை மாதத்தில் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஜூன் மாதத்தில் 2.4 சதவீதமாகக் காணப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் ஜூலை மாதத்தில் 2.5 சதவீதமாக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அதேநேரம், கடந்த ஜூன் மாதத்தில் 1.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த உணவு பணவீக்கம் ஜூலை மாதத்தில் 2.9 சதவீதமாக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

ஜூன் மாதத்தில் 2.7 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லா பணவீக்கமானது, ஜூலை மாதத்தில் 2.2 சதவீதமாக சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# கொத்துவேலி கவிதை நூல் அறிமுக விழா

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாட சாலை “76 - சி” நண்பர்கள் வட்டத்தினதும் கல்முனை வடக்கு கலாசாரப் பேரவையினதும் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண மீன்பிடி பணிப்பாளர் சி. சுதாகரன் எழுதிய “கொத்துவேலி” கவிதை நூல் அறிமுக விழா நாளை சனிக்கிழமை 24 ஆம் திகதி கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் முன்னாள் அதிபர் வடிவேல் பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நூல் அறிமுக விழாவுக்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொது முகாமையாளர் சுவாமி சுரார்ச்சிதானந்தர் ஆன்மீக விருந்தினராகவும், மேலதிக மாகாணப் பணிப்பாளரும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமாகிய வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம

வவுனியா விளக்கு வைத்தகுளம் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஹைஏஸ் ரக வாகனமும், முச்சக்கர வண்டியும் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி மீது, அதே திசையில் பயணித்த ஹைஏஸ் மோதியதில் முச்சக்கர வண்டியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.08.2024இல் வெளியிடப்பெற்றது.